## பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

# உணவு பொருட்களை கட்டவும், சாப்பிடவும் வாழை இலைகளை பயன்படுத்துங்கள்

**கலெக்டர் அறிவுறுத்தல்**



கிருஷ்ணகிரியில் நடைபெற்ற பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பிரசாரத்தை கலெக்டர் பிரபாகர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

**கிருஷ்ணகிரி, நவ.30:** கிருஷ்ணகிரியில் நடந்த பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பிரசார தொடங்கி வைத்த மாவட்ட கலெக்டர், உணவு பொருட்களை கட்டவும், சாப்பிடவும் வாழை இலைகளை பயன்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

கிருஷ்ணகிரி புதிய பஸ் நிலையம் அருகில் மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், ஊரக வளர்ச்சித் துறை சார்பில் பிளாஸ்டிக் ஒழிப்பு மற்றும் பிளாஸ்டிக்கை முற்றிலும் தவிர்க்கும் பொருட்டு விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது. ஊர்வலத்தை கலெக்டர் பிரபாகர் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:

தமிழக அரசு வரும் ஜனவரி முதல் பிளாஸ்டிக்கை முற்றிலும் தவிர்க்கும் பொருட்டு தடை விதிக்கப்பட்டுள்ளது. நாட்டில் உற்பத்தியாகும் பிளாஸ்டிக் கழிவுகளில் 80 சதவீதம் பிளாஸ்டிக் கழிவுகள் மட்டுமே சேகரிக்கப்பட்டு மறுசுழற்சிக்குள்ளாக்கப்பட்டு வெவ்வேறு வகையான பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. மீதமுள்ள பிளாஸ்டிக் கழிவுகள் குறிப்பாக மெல்லிய பிளாஸ்டிக் பைகளும், பிளாஸ்டிக் கப்களும் தரையில் சிதறி, குப்பை குவியல்களுடன் சேர்ந்து சுற்றுச்சூழலுக்கு சீர்கேட்டை விளைவிக்கின்றன. இதனால் பல்வேறு தீமைகள் ஏற்படுகின்றன. குறிப்பாக பிளாஸ்டிக் பொருட்கள் மக்குவதில்லை, நிலத்தில் போடப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் பூமிக்குள் நீர் புகாமல் தடுத்து விடுகின்றன. பிளாஸ்டிக் கழிவுகளை திறந்த சாக்கடை மற்றும் கழிவுநீர் கால்வாய்களில் போடுவதால் அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் தேங்கி தொற்று நோய் கிருமிகளும் உற்பத்தியாகின்றன. மேலும், பிளாஸ்டிகில் உள்ள வேதிபொருட்கள் நிலத்தின் தன்மையையும், நீரின் தன்மையையும், பாதிக்கின்றன. மெல்லிய பிளாஸ்டிக் பையில் கட்டப்பட்ட எஞ்சிய உணவு பொருட்களை போடுவதால் விலங்குகளும் கால்நடைகளும் உணவாக சேர்த்து பைகளையும் உண்ணுகின்றன. மெல்லிய பிளாஸ்டிக் பொருட்களை மறு சுழற்சி செய்ய இயலாது. எனவே துணி காகிதம் மற்றும் சணல் பைகளை பயன்படுத்துங்கள். தென்னை காகிதம் மற்றும் கண்ணாடி டம்ளர்களை பயன்படுத்துங்கள். உணவு பொருட்களை கட்டவும் சாப்பிடவும், வாழை இலைகளை பயன்படுத்துங்கள். இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து பொதுமக்களுக்கு பிளாஸ்டிக் ஒழிப்பு தொடர்பான துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

இந்த விழிப்புணர்வு ஊர்வலம் பெங்களூர் சாலை வழியாக சென்று அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நிறைவடைந்தது. இதில் மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் லோகேஷ்வரி, ஊரக வாழ்வாதார திட்ட இயக்குனர் உமா மகேஷ்வரி, உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) சுசீலாராணி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் கோட்ட அலுவலர் பழனிசாமி, உதவி செயற்பொறியாளர் ரவிச்சந்திரன், உதவி பொறியாளர் செல்வகணபதி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சேகர், கிருஷ்ணகிரி அனைத்து வணிகர் சங்க தலைவர் கேசவன், ஓட்டல் சங்க தலைவர் ஆரியபவன் நடராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜா, பிரசன்ன வெங்கடேசன், தாசில்தார் சேகர் மற்றும் கிருஷ்ணகிரி அனைத்து வணிகர்கள் சங்கம், ரோட்டரி, உணவக சங்கம், ஜே.சி.சி சங்கம், அரசு ஆண்கள், பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகள், தனியார் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள், மகளிர் சுய உதவிக்குழுவினர் மற்றும் தூய்மை பணியாளர்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.